1975 ஏப்ரல் 2]

மாற்றி நல்ல கட்டடங்களாக மாற்றி தருகின்ற முறையிலே திருத்தியமைக்கின்ற முறையிலே அவற்றிற்காக முன்னுரிமை வழங்குவதற்கு இலாகா ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கட்டடங்களுக்காக ஒரு குறிப்பிட்ட அளவிலே தான் நாம் நிதியை ஒதுக்குகிறோம், அந்த நிதியை மாவட்ட அளவிலே பிறகு ஒதுக்கித் தருகிறோம், அதற்குக் கட்டடக் குழுவினர் தருகின்ற ஒத்துழைப்பின் அடிப்படையிலேயும் ஊராட்சி ஒன்றியங்கள் மன்றங்கள் ஆகியவை தருகின்ற ஒத்துழைப்பின் அடிப்படையிலேயும் அரசு ஈட்டு மானியம் மற்றவையும் தந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த அந்த மாவட்டங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று மிகவும் கட்டட வசதிகள் இல்லாத இடங்களுக்கு முதலிடம் தர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அரசு உயர்நிலைப்பள்ளி, கன்னிகைப்பேர்

* 523 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், கன்னிகைப்பேரில் அமையும் அரசு உயர் நிலைப்பள்ளிக் கட்டடம் கட்டும் திட்டம் விரைவு படுத்தப்பட உள்ளதா ?

(இ) ஆம் எனில், இப்பணி எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) கன்னிகைப்பேரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

செம்பனார்கோயில் ஒன்றிய மருத்துவமனைகள்

* 524 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் செம்பனார் கோயில் ஒன்றிய பராமரிப்பில் உள்ள திருக்கடையூர், பரசலூர் மருத்துவமனைகளை நடப்பு ஆண்டில் அரசு மேற் கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.